விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல. 144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 24
ஒலி 204 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (11.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மல்லாவியில் இளைஞன் சுட்டுப் படுகொலை



(முல்லைத்தீவு)

மல்லாவி பாலிநகர் பகுதியில் இளைஞன் ஒருவர் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே பகுதி யைச் சேர்ந்த மகேந்திரன் 15

## சரத் வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் இன்று போராட்டம்

(முல்லைத்தீவு)

சரத் வீரசேகரவிற்கு எதி ராக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் அடையாளக் கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டமானது இன்று காலை 10.30 மணியள வில் முல்லைத்தீவு நீதிமன்ற முன்றலில் முன்னெடுப்பதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

தமிழ் நீதிபதிகள் தொடர் பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சபையில் தெரி வித்த கருத்தைக் கண்டித்தே இப்போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது.

அதன் படி நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஏக மனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இந்தக் கண்டனப் போராட் டத்தில் வடக்கு மாகாண இதர சட்டத்தரணிகள் சங் கங்களின் உறுப் 15

## யாழ். - சென்னை கப்பல் சேவைக்கு

# இந்தியா அனுமதித்தால் புலிகளின் கப்பல்



### போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - சென்னை கப்பல் சேவைக்கு இந்தியா அனுமதித்தால் விடுதலைப் புலிகளின் கப் பலை பயன்படுத்தத் தயாராக உள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுலா தலமாகிறது நந்திக்கடல்

(கொழும்பு)

நந்திக்கடல் கடற்கரையும் இந்த நாட்டின் கரையோரத் தில் அடையாளம் காணப் பட்ட புதிய சுற்றுலாத் தலங் களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டு 15

## முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அளம்பில் வடக்குப் பகுதியில் பெருமளவிலான ஆயு 15

## இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கை வந்தடைந்தார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செய லாளர் வினய் மோகன் குவத்ரா இலங்கையை வந்தடைந்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த வினய் மோகன் குவத்ரா உள்ளிட்ட நால்வர் கொண்ட தூதுக் குழுவை இந்திய உயர்ஸ்தானிக ராலய அதிகாரிகள் குழு வரவேற் றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் இந்திய பயணத்திற் கான ஏற்பாடுகளை செய் 16



## இளம் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை

### இளவாலையில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பிரான்பற்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

நேற்று இரவு இளவாலை பிரான்பற்று முருகன் கோவி லுக்கு அருகாமையில் இச் சம்பவம் இடம்பெற் றுள்ளது. 15

## மண்வெட்டியால் தாக்கி இளைஞன் படுகொலை

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

மண்வெட்டியால் தாக்கி இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா கல்மடு ஈஸ்வர புரம் பகுதியில் நேற்று முன் தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் வவுனியா கல்மடு ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த வேலுசாமி நிஷாந் தன் (வயது-32) என்ற 15

## யாழ்ப்பாணம் - சென்னைக்கு இடையில் விமான சேவையை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவையின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளதாக இந் திய சிவில் விமான போக்கு வரத்து அமைச்சர் ஜோதி ராதித்ய சிந்தியா தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டில்தொலைக்காணொளி ஊடாக கருத்துரைத்தபோது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் சென்னைக்கும் யாழ்ப் பாணத்துக்கும் இடையிலான விமான சேவை நாளாந்தம் இடம்பெறும். பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து விமான சேவை மேலும் அதி கரிக்கப்படும் என்று தெரிவித் தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையை அச்சுறுத்தும் இனத்துவேசி சரத் வீரசேகர

## சாடுகிறது சைவமகாசபை

நாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் மிக மோசமான இன மதத்துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகாசபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சைவமகாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் அண்மையில் குருந்தூர் மலையில் சட்டவிரோத நீதிமன்ற உத்தரவை மீறிய கட்டுமானத்தை பார்வையிட முல்லைத்தீவு கௌரவ நீதிபதி களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இவ் வழக்குடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கொழும்பு மாவட்ட எம்.பியான சரத்வீரசேகர தனது குழுவினருடன் குருந்தூரில் பிரசன்னமாகி இருந்ததோடு கருத்துரைக்கவும் முனைந்தார்.

இதன்போது நீதிபதி வழக்குடன் தொடர்புபடாத வெளிநபர்கள் சம்பவ இடத்தில் கருத்துத் தெரிவிப்பதை தவிர்க்குமாறு கூறியிருந்தார்.

இச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தன் பேரினவாத அடக்குமுறைச் சித்தாந்தத்தை பிரதிபலித்து மிக மோசமாக நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர உரையாற்றியிருந்தார். தமிழ் நீதிபதி என விளித்து அச்சுறுத்தும் எச்சரிக்கை வசனங்களை குறிப்பிட்டமை மிக மோசமான இனவாதம் ஆகும்.

அது மட்டுமன்றி நீதிமன்றத்தின் உயரிய மாட்சிமைக்கு பங்கம் விளைவிக்கும். அதி தவறான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்த வழிகோலுகின்ற வகையில் இது அமைந்திருக்கின்றது.

மேலும் இனத்துவேசியான அவர் ஆதிகாலம் தொட்டு தமிழர்களால் வழிபடப்பட்டு வந்த ஆதி சிவன் கோவிலின் திரிசூலம் பற்றியும் மிகத்தவறான கருத்துக்களை பதிவு செய்தவர்

இந்நிலையில் இன்றும் முற்றிலும் சைவத்தமிழர் வசிக்கும் இடத்தில் அவர்களின் வழிபாட்டுரிமைக்கு சவால் விடும் செயற்பாடுகளில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் அடாவடியாக ஈடுபட முனையும் வீரசேகராவிற்கு நீதிமன்ற உத்தரவுகள் விசனத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

அதன் வெளிப்பாடே பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து கௌரவ நீதிபதியை இனவாத நோக்கில் அவமதித்து அச்சுறுத்தும் வார்த்தை பிரயோகம் அடங்கிய அவரது உரையாகும்.

எனவே இன மத நல்லிணக்கத்தையும் உயரிய நீதிமன்ற மாண்பையும் காக்கும் வகையில் நாட்டின் சகல முற்போக்கு சக்திகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை பதிவு செய்ய வேண்டுவதுடன் கௌரவ ஜனாதிபதி, சபாநாயகர் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் சைவத்தமிழ் மக்கள் சார்பாகவும் நீதிமன்ற மாண்பை மதிக்கும் நாட்டின் பிரஜைகள் சார்பாகவும் வேண்டி நிற்கின்றோம் என அக் கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் 4 குழந்தைகள் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு விசாரணை

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை வைத்தியசாலை பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் 4 குழந்தைகள் இறந்திருந்தன. இந்த இறப்புக்கான காரணம் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் அடிப்படை சுகாதார நிலைமைகள்- காரணமாக இருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் நுண்ணறிவுகளை சேகரிப்பதற்காக தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


# பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணக்குப் பதியுநர்கள் (பெண்கள்)

கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)

வயது – 24 இற்கு மேல்

ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்

பொது முகாமையாளர்

வலம்புரி

தொடர்பு : 076 097 3121


# இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும்

## ரஞ்சித் பண்டார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பொருளாதாரம் வலுவடைவதன் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கடந்த வருடத்தை விட நாட்டின் நிலைமை கணிசமாக மேம்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலையான வளர்ச்சியை அடைவதற்கு சில சீர்திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் சர்வதேச அமைப்புகளும் ஏனைய நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடனை திருப்பி செலுத்துவதற்கு இந்திய அரசாங்கம் நீண்ட கால அவகாசம் வழங்கியுள்ள அதேவேளை சர்வதேச நிறுவனங்களின் உதவியை அரசாங்கம் பெற்றுள்ளதாகவும் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் சரியான திசையில் செல்வதால், கடந்த ஆண்டு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் உட்பட எஞ்சியுள்ள கட்டுப்பாடுகள் எதிர்வரும் காலங்களில் தளர்த்தப்படும் என நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

# EPF பயனாளிகளுக்கு யாழில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

EPF பயனாளிகளுக்கு யாழில் விசேட நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

EPF நிதியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் சரியாக இருத்தல் மிகவும் அவசியமானதாகும். EPF கணக்கில் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் தவறாக உள்ளவர்கள் அதனை சரி செய்தல் கடினமானது என பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இதனைக் கருத்தில்கொண்டு இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களம் இணைந்து எதிர்வரும் ஜூலை மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினங்களில் EPF கணக்கில் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் மாற்றம் ஆகியவை ஒரு நாளில் மாற்றம் செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்



## சோதீஸ்வரன் அனுசியா

பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் புத்தூர்சந்தி மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட சோதீஸ்வரன் அனுசியா அவர்கள் 09.07.2023 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சோதீஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், தங்கராசா-கமலாதேவி அவர்களின் அன்பு மகளும், அமரர் சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், சங்கீர்த்தன், வபிசன், குலதுசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அனுராதா, புவனேந்திரன், நிசாந்தன், அனுஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோடீஸ்வரன், கோயினி, அமரர் பாஸ்கரன், ததீஸ்வரன், மயூரா, சிந்துசா, கஜீபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.07.2023 இன்று அவரது தந்தையாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் பேராலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு*
*தங்கராசா - 077 074 3476*
*சோதீஸ்வரன் - 076 428 5949*
*புவனேந்திரன் - 0044 7491 168006*
*நிசாந்தன் - 0044 7453 298358*

(C-6897)

*தகவல்*
*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவில் காணிகள் சுவீகரிப்பு

# எதிர்ப்பு போராட்டத்தில் இணையுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**மண்டைதீவிலுள்ள தனியார் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனை எதிர்த்து தடுத்து நிறுத்த ஒன்றிணையுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.**



யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில் நாளை புதன்கிழமை அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப் போவதாக நிலஅளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார். (நி-5)

## யாத்திரிகர்களுடன் சென்ற பேருந்து விபத்து! இருவர் உயிரிழப்பு, 29 பேர் காயம்!

(கொழும்பு)

அம்பன்பொல பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதாகவும்29 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அம்பன்பொல பகுதியில் யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பேருந்து தரித்து நின்ற கொள்கலன் வாகனத்துடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் தலாவ பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 71 வயதுடைய நபர்களே உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 6 பெண்களும் ஒரு ஆணும் அம்பன்பொல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 18 பெண்களும் 4 ஆண்களும் கல்கமுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(நி-5)

## சீன வியாபார அங்காடிகளை புறக்கணித்த இந்தியத் தூதர்

### கொழும்பு கண்காட்சியில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு கண்காட்சியில் சீன வியாபார அங்காடிகளை இந்தியத் தூதர் புறக்கணித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக ஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

8 ஆவது கட்டுமானம், சக்தி மற்றும் ஆற்றல் கண்காட்சி 2023, கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டில் திறந்து வைக்கப்பட்டது. இந்த கண்காட்சியில் இந்தியாவின் துணை உயர் ஆணையர் வினோத் கே.ஜேக்கப் பங்கேற்றிருந்தார்.

இலங்கையின் கட்டுமானம், உள்துறை பொருட்கள், மின்சாரம் மற்றும் எரிசக்தி தொடர்பான துறைகளில் முதன்மையான கண்காட்சி ஜூலை 7 முதல் 9 வரை நடைபெற்றது.

இதில் சீனா மற்றும் இந்திய அங்காடிகள் கொண்ட சர்வதேச அரங்குகளை கொண்டிருந்த கண்காட்சியை திறந்த பின்னர், இந்திய துணை உயர்ஸ்தானிகர் இந்திய அங்காடிகளை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது கண்காட்சியின் சீனப் பகுதியை அவர் பார்வையிடுவார் என்று கலந்து கொண்டவர்கள் எதிர்பார்த்த நிலையில், பிரதி உயர்ஸ்தானிகர், இந்தியப் பகுதியைப் பார்வையிட்டவுடன் உடனடியாக வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## 2024 இல் ஜனாதிபதித் தேர்தல்

### ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதியின் தொழிற்சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

இந்த ஆண்டு தேர்தல்கள் இல்லை. 2024 தேர்தல்கள் ஆண்டாக கருதப்படும். 2024 முதல் தேர்தல் ஜனாதிபதித் தேர்தலாக இருக்கும்.

அதற்கு இப்போது தயாராகி வருகிறோம். ரணில் விக்கிரமசிங்கவை 2024 ஆம் ஆண்டு மக்கள் ஆணை மூலம் ஜனாதிபதியாக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

தற்போதைய அரசியல் தலைமையினால் இந்த நாட்டை உருவாக்க முடியாது.

பொதுவாக, உலகில் ஒரு நாடு வீழ்ச்சியடைந்தால், எதிர்க்கட்சித் தலைவர் அதனை பொறுப்பேற்பதே நியதி.

ஆனால் இலங்கையில் அதனை ஏற்றுக்கொள்ளும் முதுகெலும்பு உள்ள எதிர்க்கட்சித் தலைவர் இருக்கவில்லை. அவர் ஓடி ஒளிந்து கொண்டார் என அவர் தெரிவித்தார்.(நி-5)

## ஆண்களிடையே அதிகரிக்கும் எயிட்ஸ்

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் பாதிப்பானது பெண்களை விட ஆண்களிடையே ஏழு மடங்கு அதிகமாக காணப்படுவதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2023 ஆம்ஆண்டின்முதல் காலாண்டில் இலங்கையில் 25 புதிய எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாக நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார். மேலும், கடந்த வருடத்தில் மொத்தம் 607 புதிய எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த நோய்த்தொற்றின் அதிகரிப்பானது முந்தைய ஆண்டைவிட 44% அதிகம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இலங்கை வர அனுமதியுங்கள்

### ஜனாதிபதி ரணிலுக்கு சாந்தன் கடிதம்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 7 பேரில் இலங்கையைச்சேர்ந்த சாந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என தமிழக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

**சாந்தன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்திய உயர்** நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோருடன் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் சில நாட்களுக்கு முன்னர் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த கடிதத்தில், இலங்கை குடிமகனான தாம், முன்னாள் இந்திய பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாகவும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் தற்போது தாம் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 32 வருடங்களாக எமது தாயாரை பார்க்கவில்லை எனவும் தமது தாயின் இந்த முதுமையான காலத்தில் அவருடன் வாழ விரும்புவதாக தெரிவித்துள்ளார். ஒரு மகனாக அவருக்கு உதவியாக இருக்க ஆசைப்படுகிறேன் எனவும் சாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

**எனவே தயவுசெய்து தாம் இலங்கைக்கு வர அனுமதி அளிக்க அதிகாரிகளுக்கு உத்தர விட வேண்டும் என சாந்தன் தமது கடிதத்தில் கோரியுள்ளார். (நி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கதேசத்தை வெற்றிகொண்ட இந்திய மகளிர் அணி



வங்காளதேசத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி அங்கு 3 ஒருநாள், 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று ஆடுகிறது.

முதலாவது இருபது -20 போட்டியில் இந்திய மகளிர் அணி 3 விக்கெட்டுக்களால் வெள்ளி பெற்றுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் போட்டி நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய பெண்கள் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த வங்கதேச பெண்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 114 ரன்கள் எடுத்தது.

ஷதி ராணி 22 ரன்னும் ஷமிமா சுல்தானா 17 ரன்னிலும் அவுட் ஆகினர். சோபனா மோஸ்தரி 23 ரன்னிலும் நிகர் சுல்தானா 2 ரன்னிலும் அவுட் ஆகினர்.

இந்திய அணி சார்பில் பூஜா வஸ்த்ரகர், மின்னு மணி, ஷபாலி வர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 115 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய பெண்கள் அணி களமிறங்கியது. தொடக்க வீராங்கனை ஷபாலி வர்மா டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். ஸ்மிருதி மந்தனா பொறுப்புடன் ஆடி 38 ரன்கள் எடுத்தார்.

இறுதியில், இந்திய மகளிர் அணி 3 விக்கெட்டுக்கு 118 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. கப்டன் ஹர்மன்பிரீத் கவுர் அதிரடியாக ஆடி 35 பந்தில் 2 சிக்சர், 6 பவுண்டரி உட்பட 54 ரன்கள் குவித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இந்த வெற்றியின் மூலம் இந்திய மகளிர் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது.(6)

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி முன்னணி வீரர்கள் சறுக்கல்



கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை வீராங்கனையான ஸ்வியாடெக் (போலந்து) 4 ஆவது சுற்றில் 14 ஆவது வரிசையில் உள்ள பெலிண்டா பென்சிக்கை எதிர்கொண்டார். இதில் ஸ்வியாடெக் 6-7 (4-7), 7-6 (7-2), 6-3 என்ற செட் கணக்கில் போராடி வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 4 ஆவது சுற்று ஆட்டத்தில் 4ஆவது வரிசையிலிருக்கும்ஜெசிகா பெகுலா 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் உக்ரைனை சேர்ந்த லெசியா சுரென்கோவை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் வான்ட்ரூசோவா (செக் குடியரசு), சுவிட்டோலினா (உக்ரைன்) ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர். முன்னாள் நம்பர் வன் வீராங்கனையும் 19 ஆவது வரிசையில் உள்ளவருமான அசரென்கா 4 ஆவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். அவர் 2-6, 6-4, 6(9)-7(11) என்ற செட் கணக்கில் சுவிட்டோலினாவிடம் தோற்றார்.

காலிறுதி ஆட்டத்தில் ஸ்வியாடெக்- சுவிட்டோலினா, பெகுவா- வாண்ட்ரூசோவா மோதுகிறார்கள்.

8 ஆவது வரிசையில் உள்ள சின்னர் (இத்தாலி) 7-6 (7-4), 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் கொலம்பியாவை சேர்ந்த டேனியல் கேலனை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். மற்ற ஆட்டத்தில் ரூப்லெவ், ரோமன் சபியுலின் (ரஷ்யா), வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர். (6)

# கனடா கராத்தே சுற்றுப் போட்டியில் இலங்கைத் தமிழர் மத்தியஸ்தராக பங்கேற்பு



கனடாவின் தேசிய கராத்தே சுற்றுப்போட்டி - 2023 கியூபெக் மாநிலத்தின் லவாலில் அண்மையில் இடம் பெற்றது. கனடாவின் பல மாநிலங்களில் வெற்றி பெற்று தெரிவான வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

அதில் இலங்கை தமிழரான எஸ்.மனோகரன் கனடா தேசிய மத்தியஸ்தர் தரத்தில் சித்தியடைந்து, இந்த சுற்றுப் போட்டியில் மத்தியஸ்தராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஆஷஸ் டெஸ்டில்

# ஆஸியின் தொடர் வெற்றிக்கு செக் வைத்த இங்கிலாந்து



ஆஷஸ் தொடரின் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

லீட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட் செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 263 ரன்கள் எடுத்தது. மிட்செல் மார்ஷ் பொறுப்புடன் ஆடி சதமடித்து 118 ரன்னில் ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து சார்பில் மார்க்வுட் 5 விக்கெட்டும் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டும் பிராட் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 237 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

பென் ஸ்டோக்ஸ் சிறப்பாக ஆடி 80 ரன்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா சார்பில் பேட் கம்மின்ஸ் 6 விக்கெட்டும் ஸ்டார்க் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். 26 ரன்கள் முன்னிலை பெற்ற அவுஸ்திரேலிய அணி 2 ஆவது இன்னிங்சில் 224 ரன்களுக்கு ஓல்அவுட் ஆனது. டிராவிஸ் ஹெட் 77 ரன்னும் கவாஜா 43 ரன்னும் எடுத்தனர்.

இங்கிலாந்து சார்பில் பிராட், கிறிஸ்வோக்ஸ் தலா 3 விக்கெட்டும் மார்க்வுட், மொயீன் அலி தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 251 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து 2 ஆவது இன்னிங்சை ஆடியது. 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 27 ரன்கள் எடுத்தது.

இந்நிலையில், நான்காம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. அணியின் எண்ணிக்கை 42 ஆக இருந்த போது பென்டக்கெட் 23 ரன்னில் அவுட்டானார்.

அடுத்து இறங்கிய மொயீன் அலி 5 ரன்னில் ஆட்டமிழந்தார். நிதானமாக ஆடிய சாக் கிராலி 44 ரன்னில் வெளியேறினார்.

அவரை தொடர்ந்து ஜோ ரூட் 21 ரன்னிலும் பென் ஸ்டோக்ஸ் 13 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். பொறுப்புடன் ஆடிய ஹாரி புரூக் அரை சதமடித்து 75 ரன்கள் எடுத்து அவுட்டானார். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதியில், இங்கிலாந்து 7 விக்கெட்டுக்கு 254 ரன் களை எடுத்து வெற்றி பெற் றது. கிறிஸ் வோக்ஸ் சிறப்பாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். கிறிஸ் வோக்ஸ் 32 ரன்னும் மார்க் வுட் 16 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இதன்மூலம் 3 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. தற்போது ஆஷஸ் தொடரில் 2-1 என அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கிறது.

அவுஸ்திரேலியா சார்பில் மிட்செல் ஸ்டார்க் 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இரு அணிகளுக்கு இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறுகிறது. (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இறைச்சி, மீன் விலை உயர்வால் முட்டைக்கான தேவை அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூர் முட்டைகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முட்டைக்கான உள்ளூர் தேவை 10% அதிகரித்து, முட்டை உற்பத்தி 30 லட்சத்தில் இருந்து 50 லட்சமாக அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இறைச்சி மற்றும் மீனின் விலை அதிகரிப்பினால் முட்டைக்கான தேவை அதிகரித்ததன் காரணமாக முட்டையின் விலை அதிகரித்துள்ளதாகவும் எதிர்வரும் இரண்டு வாரங்களில் தேவை குறைவடைந்ததன் பின்னர் மீண்டும் முட்டையின் விலை குறைவடையும் எனவும் சரத் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)







## சைவ வித்தியா விருத்திச் சங்கம் பதவி வெற்றிடங்கள்

**நிர்வாக அலுவலர் - பெண்**

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி அல்லது சமமான கல்வித் தகைமை.
- கணினி அறிவு
- அரச, தனியார் துறைகளில் 05 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் (ஓய்வு பெற்ற அதிபர்கள், நிர்வாகிகள் பொருத்தமாயிருப்பர்)
- வயதெல்லை: 40-65

**உள்ளகக் கணக்காய்வாளர் - பகுதி நேரம்**

- க.பொ.த (உ/த)வில் வணிகப் பிரிவில் சித்தி அல்லது அதற்குச் சமமான கல்வித் தகைமை
- கணினி அறிவு
- வயதெல்லை: 25-50

**உபவிடுதிக் காப்பாளர் : ஆண்/பெண்**

- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
- உணவு, தங்குமிட வசதி இலவசம்
- வயதெல்லை: 25-50

**சமையலாளர் - பெண்**

- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
- வயதெல்லை - 25-50

**தொழிலாளி**

- அலுவலகத்திலும் சைவச் சிறுவர் இல்லங்களிலும் பணியாற்றுவதற்கு நல்ல ஆரோக்கியமுள்ள, சுறுசுறுப்பானவராக இருத்தல் வேண்டும்
- கல்வித் தகைமை : க.பொ.த(சா/த)
- வயதெல்லை: 35-55

● **எல்லாப் பதவிகளுக்கும் சம்பளம் பேசி நிர்ணயிக்கப்படும்.**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 20.07.2023 இற்கு முன்னர் **சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி-6893)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
021 222 6525.

லோ.துஷிகரன்,
செயலாளர்.


# இராசிபலன்

11.07.2023
ஆனி 26, செவ்வாய்க்கிழமை
நவமி முன்னிரவு 10.45 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 11.53 மணிவரை

சுபநேரம் -10.29-11.59 மணிவரை
இராகுகாலம்-2.59-4.29மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாடு மகத்துவம் தரும்.

**ரிஷபம்** சுப காரியங்கள் மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மனச் சஞ்சலங்கள் சற்றுக் கூடும், முயற்சிகளில் வெற்றி பெற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலில் உயர்நிலைக்கு வர சந்தர்ப்பம் உண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** வருங்கால நலன் கருதிய எண்ணங்கள் மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் நீங்கி சிறப்புக்கள் கூடும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**தனுசு** கேளிக்கைக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

நன்றாக உழைக்கின்ற எந்த மனிதனும் வறுமையை அடைவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கோரிக்கை

(கண்டாவளை)

சிறுபோக அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில் நெல்லை தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களால் மிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதாகவும் இதனால் தாம் பெரும் நட்டத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்தோடு தண்ணிமுறிப்பு வயல்வெளிக்கு செல்லும் தெற்கு வாய்க்கால் மற்றும் மத்திய வாய்க்கால் வீதிகள் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் விவசாயிகள் தங்கள் விவசாய நடவடிக்கையினை கடும் சிரமத்திற்கு மத்தியில் முன்னெடுப்பதாக தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுக் காலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் தண்ணிமுறிப்பு விவசாயப் பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடிய போது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் தற்போது தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் அதேநேரம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நிலைமை காரணமாக தற்போது பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உறுதி வழங்க முடியாதென வும் தெரித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ம.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6-315)

## இந்திய இழுவைப் படகுகளை

# தடை செய்யக் கோரி தமிழ்க்கட்சிகள் வலியுறுத்த வேண்டும்

## மீனவ அமைப்புக்கள் கோரிக்கை

(அராலி)

எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளை தடை செய்யுமாறு இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணிலிடம் தமிழ் கட்சிகள் ஓரணியில் வலியுறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், அண்மையில் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது அதில் பேசப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் தமிழரின் இனப் பிரச்சினை மற்றும் முல்லைத்தீவு புதைகுழி விவகாரம் தொடர்பில் பேசப்பட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்ல உள்ள நிலையில் பதின்மூன்று தொடர்பில் இந்திய பிரதமருக்கு தமிழ் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

இந்திய எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் ஆவதற்கு போதிய காலஅவகாசம் இருக்கின்ற நிலையில் தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று எமது பிரச்சினை தொடர்பில் இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். குறித்த ஊடக சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் மற்றும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர். செல்லத்துரை நற்குணம் ஆகியோர் கலந்து கொண்டனர (நி-5-6-104)

# குடும்ப தகராறு காரணமாக விபரீத முடிவு எடுத்த இளைஞன்

## மருத்துவமனையில் அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன்புலோவில் குடும்பத் தகராறு காரணமாக தன்னைத் தானே போத்தலால் குத்திய இளைஞன் ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மறவன்புலோவைச் சேர்ந்த 24 வயதான இளம் குடும்பஸ்தரே இவ்வாறு தன்னைத் தானே நெஞ்சில் போத்தலால் குத்திய நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (நி-5-6-30)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) ஏற்றப்படவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-11 மணிவரை பிறவுண் றோட் கலட்டி வீதி, மு.ப 11-1 மணிவரை மெதடிஸ் மிசன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி, பி.ப 2.30-4 மணிவரை சபாபதி ஒழுங்கை தலையாழி வைரவர் கோவில் வீதியும் நாளை புதன் கிழமை காலை 9- 11 மணிவரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை , மு.ப 11-1 மணிவரை ஆரோக்கிய மாதா கோயிலடி கஸ்தூரியார் வீதியிலும் , பி.ப 2.30 -4 மணிவரை கனகசபை வீதியிலும் நாளை மறுதினம் வியாழக் கிழமை மு.ப 9-11 மணிவரை சைவ பரிபாலன சபை நீராவியடி, மு.ப 11 -1 மணிவரை பிறவுண் வீதி 1 ஆம் ஒழுங்கை, பி.ப 2.30 -4 மணிவரை மணிக்கூட்டு ஒழுங்கை சையன் ஓசன் தனியார் கல்வி நிலையம் முன்பாகவும் 14 ஆம் திகதி காலை 9 -11 மணிவரை ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி, மு.ப 11- 1 மணிவரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை , மு.ப 2.30- 4 மணிவரை அன்னசத்திர லேன் நாவலர் வீதியிலும் 17 ஆம் திகதி காலை 9- 11 மணிவரை பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை , மு.ப 11 -1 மணிவரை குமாரசாமி வீதி ஆச்சிரமம், பி.ப 2.30-4 மணிவரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும் 18 ஆம் திகதி காலை 9-11 மணிவரை ஐயனார் கோவிலடி வண்ணை வைத்தியசாலை முன்பாகவும், மு.ப 11-1 மணிவரை கலாஜோதி , பி.ப 2.30- 4 மணிவரை கலைவாணி சனசமூக நிலையம் ஓட்டு மடத்திலும் 19 ஆம் திகதி காலை 9 -11 மணிவரை தாமரை வீதி முருகன் கோவிலடி.மு.ப 11-1 மணிவரை பெரிய தம்பிரான் வீதி வெற்றி மாதா கோவிலடி, பி.ப 2.30 - 4 மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் 20 ஆம் திகதி காலை 9-11 மணிவரை முருகமூர்த்தி வீதி ஐங்கரன் சனசமூக நிலையம், மு.ப 11-1 மணிவரை கே.கே. எஸ் கலைவாணி முன்பள்ளி, பி.ப 2.30-4 மணிவரை பூநாறி ஒழுங்கை காரைக்கட்டு சந்தியிலும் 21 ஆம் திகதி காலை 9 -11 மணிவரை மிலோனியம்லேன் இராமநாதன் வீதி, மு.ப 11-1 மணிவரை நாவலடி பி.ப 2.30- 4 மணிவரை நடமாடும் சேவை கலட்டிச்சந்தி ஆகிய இடங்களில் வைத்து ஏ. ஆர். வி தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (நி-5-6)

# பழுதடைந்திருந்த படகுப் பாதை வழமைக்குத் திரும்பியது



(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக பழுதடைந்திருந்த காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான பாதை சேவை நேற்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையில் கடல் பாதை சேவை இடம்பெற்று வரும் நிலையில் அவை அடிக்கடி பழுதடைவதால் இரு ஊர்களுக்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர். இந்த நிலையில் குறித்த சேவை நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)


# கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிதிச் செயலர்
கலாநிதி சி.பத்மராஜா அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.(திருமதி) சின்னத்தம்பி சின்னம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்.

(சி-6894)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர் சபையும் நிர்வாகமும்
இல்லப் பிள்ளைகளும் பணியாளர்களும்



## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் -2023
## கரைச்சி பிரதேச சபை- கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையினால் ஸ்கந்தபுரம் நூலகத் திருத்த வேலைத் திட்டத்திற்கு 2023.07.07 ஆம் திகதி வலம்புரி ,Daily News, Dinaharan, Dinamina பத்திரிகைகளில் கேள்வி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அக்கேள்வி அறிவித்தலில் உள்ள 08 ஆம் பந்தி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

08. Bids shall be valid up to (77 days) 04th October, 2023. All bids shall be accompanied by a Bid Security, of Rs.68,000.00 Bid Security shall be valid up to 31st October, 2023.

(c-6896)

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
கரைச்சி பிரதேச சபை -கிளிநொச்சி.

11.07.2023.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிய நாடல்ல இலங்கை

## சரத் வீரசேகரவுக்கு மஹிந்தானந்த விளக்கம்



**(கொழும்பு)**

**இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிய நாடல்ல. இது அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சொந்தமானது. எனவே, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதோடு, அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை மறந்துவிட வேண்டாம் என்று கடந்த வாரம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அவரின் இந்த கருத்து நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தல் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஊடகமையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போது,

சரத் வீரசேர பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மஹிந்தானந்த அளுத்கமகேவின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதற்கமைய ஒரு சிலர் சிங்கள பௌத்த மக்களுக்காக மாத்திரம் பேசி அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்கின்றனர். வேறு சிலர் அடிப் படைவாதத்துக்கு சார்பான கருத்துக்களை முன்வைத்து அவர்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரி வாகின்றனர். இவ்வாறானவர்கள் இலங்கையில் பல்வேறு இனங்களையும், மதங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் மக்கள் வாழ்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே, மக்கள் பிரதி நிதிகள் தேசிய ஒற்றுமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். எனது தொகுதியான நாவலப்பிட்டியில் அனைத்து இன மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நான் தலைமை வகிக்கின்றேன்.

அவ்வாறிருக்கையில், இது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கருதுவது தவறு. அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையுடன்வாழ நாம் பழக வேண்டும். இலங்கை அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடாகும். எனவே சரத் வீரசேகர தெரிவித்த கருத்து அவரது தனிப்பட்ட நிலைப்பாடேயன்றி, அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. இது தொடர்பில் எவரும் வீணாக கலவரமடையத் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (நி)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம் 2023/2024

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கத்தினரின் புதிய நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கும் பழைய மாணவர்களுடன் தொடர்புபட்ட எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடுவதற்குமான பொதுச்சபைக் கூட்டம் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டம் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கிணங்க பழைய மாணவர் சங்கத் தலைவரான அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் கல்லூரியின் செயற்பாடுகளில் அக்கறையுடைய அனைத்து பழைய மாணவர்களையும் பங்குபற்றி பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இடம் - தம்பர் மண்டபம்
காலம் - 29.07.2023 சனிக்கிழமை
நேரம் - மு.ப 10.00 மணி

திரு.சி.இந்திரகுமார், தலைவர்,
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (சி-6895)



## மணிவிழா வாழ்த்து

திருமதி.
**கருணாதேவி சிவதாசன்**
(பகுதித் தலைவர்) SLTS-I




சேவை விபரம்
மன்/தாழ்வுபாடு றோ.க
தமிழ்க் கலவன் பாடசாலை
14.12.1987-07.01.1990
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
08.01.1990-01.01.1992
மன்/தாழ்வுபாடு றோ.க
தமிழ்க்கலவன் பாடசாலை
02.01.1992-09.06.1994
மன்/எருக்கலம்பிட்டி மத்திய
மகா வித்தியாலயம்
10.06.1994-12.03.1995
மன்/அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்
13.03.1995-06.10.1998
யா/சென்சாள்ஸ் மகா வித்தியாலயம்
07.10.1998-06.06.2010
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
07.06.2010-23.01.2016
யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
24.01.2016-03.01.2017
யா/கொக்குவில் கிழக்கு நாமகள்
வித்தியாலயம்
04.01.2017-10.07.2023

எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் கடமையாற்றி ஒய்வு பெற்றதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதுடன் ஒய்வுக் காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

(6253)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5' 10"
தகைமை/தொழில்: Computer Science மாணவன் Store Keeper (Australia)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13804

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: BSc, MSc Soft Ware engineer (கனடா)
எதிர்பார்ப்பு: ஆங்கிலம் பேசும் பட்டதாரிப் பெண்.
தொ.இ: B/13809

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 33
உயரம்:5' 3"
தகைமை/தொழில்: ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு: உள்நாடு/ வெளிநாடு
தொ.இ: B/13810

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 48 1/2
உயரம்:5' 8"
தகைமை/தொழில்: BSc (Hons) Teacher
எதிர்பார்ப்பு: உயர் பதவி,பட்டதாரி
தொ.இ: B/13811

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 0
உயரம்:5' 3"
தகைமை/தொழில்: NDT Teacher அரச விவாகரத்தானவர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ:G/13807

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 38 1/4
உயரம்:5'4
தகைமை/தொழில்:A/L சுவிஸ் (விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/13813

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்:5
தகைமை/தொழில்: A/L உபதபாலதிபர் (விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்/வெளிநாடு
தொ.இ:G/13816

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 100 1/2
உயரம்:168 Cm
தகைமை/தொழில்: BSc இறுதியாண்டு மாணவி
எதிர்பார்ப்பு: பட்டதாரி. விரிவுரையாளர். எஞ்சினியர். வெளிநாடு.
தொ.இ:G/13818

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 162

### மனதளவில் பாதிக்கப்பட்டவருக்குப் பக்கபலமாக இருக்கும் வழிகாட்டிப் பூனை பெண்டிட்



மனிதர்களின் உற்ற நண்பன் நாய்தான் எனப் பெரும்பாலோர் சொல்லிக் கேட்டிருப்போம்.

நானும்தான் என்று கிளம்பியுள்ளது அவுஸ்திரேலியாவில் ஒரு பூனை.

பெண்டிட் சாதாரணப் பூனை அல்ல. கெட்டிக்காரி.

மனதளவில் பாதிக்கப்பட்ட அந்தோருக்கு பெண்டிட் தான் பக்கபலம்.

அவுஸ்திரேலியாவின் எல்லைக் கட்டுப்பாட்டுப் படையின் முன்னாள் அதிகாரி அந்தோர்.

அவசரச் சேவைப் பிரிவில் பல ஆண்டாக வேலை செய்ததில் அவருக்கு மனத்தளர்ச்சிக் கோளாறு ஏற்பட்டுவிட்டது.

அப்படிப்பட்ட சூழலில் தோள் கொடுக்க வந்தவள் பெண்டிட்.

அவுஸ்திரேலியாவில் பெண்டிட் மட்டும் தான் உதவிசெய்யக்கூடிய பூனை என்ற அதிகாரபூர்வ உரிமத்தைப் பெற்றிருக்கிறாள்.

தற்போது நியூ சவுத் வேல்ஸ் மாநில உரிமம் மட்டுமே இவளிடம் உள்ளது.

கூடிய விரைவில் அவுஸ்திரேலியாவின் தலை நகரிலும் வழிகாட்டிக்கான உரிமத்தைப் பெண்டிட் பெற்றுவிடுவாள்.

நாயைப் போல பூனைக்கு உரிமம் பெறுவது அத்தனை சுலபமல்ல.

பொது இடங்களில் வழிகாட்டியாக அழைத்துச் செல்வது பாதுகாப்பானது என்பதை நிரூபிக்க வேண்டும்.

அந்தச் சோதனையை வெற்றிகரமாகக் கடந்து விட்டாள் பெண்டிட். கடுமையான மன அழுத்தத் திற்கான சிகிச்சையிலும் பெண்டிட் பயிற்சி பெற்றிருக்கிறாள்.

பெண்டிட்டின் துணையுடன் என்ன வந்தாலும் பார்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் வாழ்கிறார் அந்தோர்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## வடஇந்தியாவில் அடைமழை சுமார் 15 பேர் உயிரிழப்பு

(டில்லி)

வடஇந்தியாவில் பெய்யும் அடைமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தாலும் நிலச்சரிவுகளாலும் சுமார் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.


கனமழை தொடரும் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளதால்.

புதுடில்லியில் நேற்று பள்ளிகளை மூட உத்தர விடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் 153 மில்லி மீற்றர் அளவுக்கு மழை பெய்தது.கடந்த 40 ஆண்டுகளில் அங்கு ஜூலை மாதம் ஒரே நாளில் பெய்த அதிகமான மழை இது ஆகும்.6 வட மாநிலங்களில் 24 மணி நேர இடைவெளியில் 15 பேர் உயிரிழுந்துள்ளதாக த பிரஷ் ரஸ்ட் ஒப் இந்தியா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

குறிப்பாக மலைப்பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்கிறது.இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் 700 சாலைகள் பாதிக்கப்பட்டன.

அங்கு 6 பேர் உயிரிழந்ததாக அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)



## சூடான் உள்...
## எச்சரிக்...
### இதுவரை சு...

(கார்டும்)

வடகிழக்கு ஆபிரிக்க... துணை இராணுவ அ... இடையில் சண்டை நட... பல்வேறு ராஜதந்திர ... சூடான் முழு அளவிலா... நாடுகள் சபை எச்சரித்...

சூடான் இராணுவத்தின் மிக முக்கியமான நட்பு நாடாகக் கருதப்படும் எகிப்தும் ஆர்.எஸ்.எஃப் அமைப்புடன் நெருங்கிய உறவுகளை கொண்டிருக்கும் ஐக்கிய அரபு அமீரகமோ இதுவரை ஒரு முக்கிய முடிவோ, சண்டையையோ முடிவுக்கு கொண்டு வரும் எந்த முயற்சியோ இதுவரை எடுக்கவில்லை.

இராணுவம் மற்றும் ஆர்.எஸ்.எஃ...

## உக்ரைனுக்கு கொத்தணிக் குண்டு வெள்ளை மாளிகையின் முடிவை அங்கீகரிக்க மறுக்கும் பிரித்தானியா



(லண்டன்)

உலகளாவிய ரீதியில் பிரித்தானியா உட்பட 123 நாடுகளில் கொத்தணி வெடி குண்டுகள் தடை செய்யப்பட்டுள்ளன.

உக்ரைனுக்கு கொத்தணிக் குண்டுகளை வழங்கும் அமெரிக்காவின் முடிவை பிரித்தானியா அங்கீகரிக்க மறுத்துள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் பிரித்தானியாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் உக்ரைனுக்கு கொத்தணிக் குண்டுகளை வழங்கும் அமெரிக்கவின் முடிவு பிரித்தானியாவை சங்கடப்படுத்தியுள்ளது.

உக்ரைனுக்கு இந்த ரக குண்டுகளை வழங்குவதான வெள்ளை மாளிகையின் அறிவிப்பு பிரித்தானியாவிலும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இது அமெரிக்காவுக்கு ஒரு கடினமான முடிவாக இருந்தாலும் உக்ரைனியர்களிடம் வெடிமருந்துகள் தீர்ந்துவிட்டதால் இதனை செய்யவேண்டும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

எனினும் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய ரிசி சுனக், அமெரிக்காவின் இந்த முடிவை ஆதரிக்க பகிரங்கமாக மறுத்திருந்த நிலையில் பைடனின் பிரித்தானிய சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கெ...
## கப்...

...பிய... செ... தீபகற்... அருகே... நீர்ப்... நீர்மூ... பலை... அமெ... முடிவு... கொரி... னம்... அ... ரிக்கா... துண... அ... பூசல்... ரிப்ப...

## விபத்தில் கையை இழந்த நண்பனுக்கு கை கொடுத்த நண்பர்கள்

(மாட்ரிட்)

ஸ்பெயினில் சில பதின்ம வயதினர் ஒன்று சேர்ந்து தங்கள் நண்பருக்குச் செயற்கைக் கை ஒன்றை உருவாக்கியிருக்கின்றனர்.

அதற்காகத் தொழில்நுட்ப விருதையும் அவர்கள் வென்றனர்.14 வயது ஃபதுமாட்டா 8 மாதத்திற்கு முன் மேற்கு ஆபிரிக்காவில் உள்ள காம்பியா விலிருந்து ஸ்பெயினின் சரகோசா நகரைச்சென்றடைந்தார்.

அவருக்கு 7 வயதாக இருந்த போது விபத்தொன்றில் கையை இழந்தார்.

அது அவரது படிப்பிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

அவருடைய தந்தை சரகோசாவில் நிலையான வேலையைப் பெற்றவுடன் ஃபதுமாட்டா அங்கு சென்றார்.

மொழி தெரியவில்லை. உடற்குறையையும் சமாளிக்க வேண்டியிருந்தது.வகுப்பாசிரியரின் புத்தாக்க யோசனையாலும் சக மாணவர்களின் அரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ள்நாட்டு போர் இன்னும் தீவிரமடையும் அபாயம்

# ங்கை விடுக்கும் ஐக்கிய நாடுகள் சபை !

## சுமார் 30 லட்சம் மக்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

**ரிக்க நாடான சூடானில், அந்நாட்டு இராணுவத்திற்கும் அமைப்பான இராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் நடந்து வருகிறது. இந்த சண்டையை நிறுத்துவதற்கான திர முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை. எனவே, லான உள்நாட்டுப் போரின் விளிம்பில் இருப்பதாக ஐக்கிய சரித்துள்ளது.**



மக் டும் டன் ன்டி மா வா. ந்டு ரை ளப்

உடன் அதிகாரத்தை பகிர்ந்து கொண்ட மக்கள் கட்சிகள் உட்பட சூடான் நாட்டு பிரதிநிதிகள் எத்தியோப்பிய தலைநகர் அடிஸ்அபாபாவில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.


கார்டோம் பிராந்தியத்திற்கு தென்மேற்கில் உள்ள எல் ஓபீட் பகுதியிலும் மற்றும் தலைநகரின் தெற்குப் பகுதியிலும் நேற்று முன்தினம் இராணுவத்திற்கும் ஆர்.எஸ்.எஃப் இற்கும் இடையிலான மோதல்கள் நடைபெற்று வரும் சூழ்நிலையில் இந்த முயற்சிகள் நடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

டார்ஃபர் நகரின் மேற்குப்பகுதி உட்பட சூடானின் பிற பகுதிகளிலும் வன்முறை வெடித்துள்ளது. சூடானின் தலைநகர் கார்டோமில், ஏப்ரல் 15 அன்று வெடித்த சண்டையின் விளைவாக சுமார் 30 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

சூடானின் அண்டை நாடான சாட்டில் ஏற்கனவே உள்ள 7 முகாம்களில் 36,423 அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர். நடை பெற்று கொண்டு வரும் வன்முறை காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள் 2,45,000 அகதிகள் வருவதற்கு தயாராகி வருவதாக அகதிகளுக்கான ஐ.நா. ஆணையகம் தெரிவித்துள்ளது. 4 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர் பதவி கவிழ்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கொரிய தீபகற்பத்திற்கு நீர்மூழ்கி கப்பலை அனுப்பும் அமெரிக்கா

### — வடகொரியா கண்டனம் —



(பியாங்யாங்) கொரியத் தீபகற்பத்திற்கு அருகே உள்ள நீர்ப் பகுதிக்கு நீர்மூழ்கிக் கப்பலை அனுப்பும் அமெரிக்காவின் முடிவுக்கும் வட கொரியா கண்டனம் தெரிவித்தது.

அந்த வட்டாரத்தில் அமெரிக்கா இராணுவப் பதற்றங்களைத் தூண்டுவதாக அது குறிப்பிட்டது.

அதனால், அணுவாயுதப் பூசல் ஏற்படும் அபாயம் அதிகரிப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் ஆகாய வெளியில் அத்துமீறி நுழையும் அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தப் போவதாகப் வடகொரியா எச்சரித்துள்ளது. (நி-5)

## ஆரம்பப் பாடசாலையில் கத்திக்குத்து மூன்று மாணவர்கள் உட்பட 6 பேர் பலி

### சீனாவில் சோகம்

(பீஜிங்) சீனாவில் ஆரம்பப் பாடசாலையொன்றில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சீனாவின் தென்கிழக்கு குவாங்டாங் மாநிலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வு என அழைக்கப்படும் 25 வயது நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் ஒரு ஆசிரியர், இரண்டு பெற்றோர்கள், மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் சமீபகாலங்களில் கத்திக்குத்து சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த ஆகஸ்டில் ஆரம்பப்பாடசாலையொன்றில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## திடீரென இடிந்து விழுந்த அடுக்குமாடிக் குடியிருப்பு இடிபாடுகளுக்குள் சிக்கி 11 பேர் உயிரிழப்பு



(பிரேசிலியா) பிரேசிலின் பெர்னாம்புகோ மாநிலத்தில் உள்ள பாலிஸ்டா பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்பொன்று திடீரென இடிந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழந்துள்ளமை பிரேசிலில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த சில நாட்களாகக் கடும் மழை பெய்து வந்த நிலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த கட்டடம் இடிந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இடிபாடுகளுக்குள் சிக்கி இதுவரை சுமார் 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 3 பேரைக் காணவில்லை எனவும் அவர்களைத் தேடும் பணி தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குடியிருப்பு சேதமடைந்து மக்கள் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டதால், நீதிமன்ற உத்தரவுப்படி 2010 ஆம் ஆண்டு மூடப்பட்டதாகவும், அதன் பின்னர் பல குடும்பங்கள் சட்டவிரோதமாக அங்கு குடியிருந்ததாகவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

ணைப்பாலும் தீர்வு பிறந்தது.ஃபதுமாட்டாவிற்குச் செயற்கைக் கையை உருவாக்கலாம் என்றார் ஆசிரியர் டேனியல்.

ஒரு மாதமாக மாணவர்கள் அதற்கான வேலையில் இறங்கினர். வடிவமைப்பு, உற்பத்தி, செயற்பாடு எனத் தனித்தனி குழுக்களாகச் செயற்பட்டனர்.

மற்றும் சிலர் ஃபதுமாட்டாவிற்கு மொழிபெயர்ப்புச் செயலிஒன்றையும் உருவாக்கினர்.

மாணவர்களின் புத்தாக்கப் படைப்பு தற்காலிகத் தீர்வுதான். ஃபதுமாட்டா இன்னும் நவீனமான செயற்கைக் கையைப் பிற்காலத்தில் பெற்றாக வேண்டும்.

ஆனால் இந்தப் பயணத்தில் மாணவர்கள் அனைவரும் இன்னும் நெருக்கமானதாகக் கூறினார் ஆசிரியர்.

மற்றோர் இன்ப அதிர்ச்சியாக மாணவர்களின் புத்தாக்கக் கண்டுபிடிப்பு உள்ளூரின் அறிவியல் தொழில்நுட்பப் பரிசை வென்றது.28 புள்ளிகளைப் பின்னுக்குத் தள்ளி முதல் பரிசைத் தட்டிச் சென்றனர் மாணவர்கள். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியாவின் பங்களிப்பு மிக அவசியம்

## வவுனியாவில் மனோ வலியுறுத்து



(வவுனியா)

**இலங்கையிலுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின் போது, வெறுமனே விருந்தோம்பலை மாத்திரம் வழங்காமல், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேச வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.**

மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

இலங்கை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பெரும் கடமையும் கட்டுப்பாடும் உள்ளது. இலங்கை அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே, இலங்கையில் காணப்படும் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். ஏனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர் பேச வேண்டும்.

ஊழல் ஒழிப்பு சட்ட மூலமானது, கடந்த காலங்களில் அரச சொத்துக்களை கொள்ளையிட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவதாகவும்,அவர்களால் கொள்ளையிடப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீள நாட்டுக்கு கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும். ஆனால், தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சட்ட மூலத்தில் அவ்வாறு எதுவும் இல்லை.

இது அந்த சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடாகும். எனவே, நாம் இவ்விடயத்தில் அதிருப்தியுடன் இருக்கின்றோம். கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழி காட்ட வேண்டும்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தொடர்பில் இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு உண்மையில் விசாரணைக்குழுவல்ல. அது முட்டாள் குழுவாகும். கோழியைப் பாதுகாக்கும் பொறுப்பு நரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைப் போன்றுதான் இந்தக் குழுவின் நியமனமும். நாடு வங்குரோத்தடைய பிரதான காரணம் ராஜபக்ஷ அரசாங்கம் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வாறிருக்கையில், ராஜபக்ஷக்களின் கட்சியின் பொதுச் செயலாளர் தலைமையில் குழுவொன்றை அமைத்து, நாடு வங்குரோத்தடைய யார் காரணம் என வினவினால் அவர் யாரைக் கூறுவார்?

எனவே அக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிலிருந்து விலக வேண்டும் என்று எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன். அவர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என அவர் தெரிவித்தார். (நி-5)

## வவுனியாவில் நிலவாடகை செலுத்தாத வர்த்தக நிலையங்களுக்கு சிவப்பு நோட்டீஸ்

(குருமன்காடு)

வவுனியா மாநகரசபையினால் நிலவாடகை செலுத்தாத 130 வர்த்தக நிலையங்களிற்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் கீழ் 447 கடைகள் காணப்படுகின்றன.

இவற்றில் கடந்த 2022 ஆம் ஆண்டு தொடக்கம் பல வர்த்தக நிலையங்கள் நிலவாடகை செலுத்தாத நிலையில் நகரசபையினால் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக 86 கடைகளுக்கும் நேற்று 44 கடைகளுக்கும் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதுடன், வரும் நாட்களில் நிலவாடகை செலுத்தாத ஏனைய வர்த்தக நிலையங்களிற்கும் இந்நடவடிக்கை தொடரவுள்ளது.

மேலும் மாநகரசபையின் அனுமதியின்றி சிவப்பு அறிவித்தலினை அகற்றிய வர்த்தக நிலையங்களின் மீது வழக்குப்பதிவு செய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாநகரசபையினால் வர்த்தக நிலையங்களிற்கு 500 தொடக்கம் 6000 ரூபாய் வரையே வாடகை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை 2022 இல் இருந்து செலுத்தாத காரணத்தினாலேயே வர்த்தக நிலையங்களிற்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

## ஆனையிறவில் கஞ்சா பொதியுடன் ஒருவர் கைது



(முறிகண்டி)

ஆனையிறவில் கஞ்சாப் பொதியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக நேற்று முன்தினம் இரவு ஆனையிறவு சோதனைச் சாவடியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தனது உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி முறிப்பு பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து 5 கிலோ 990கிராம் எடையில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில் நீதிமன்றில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-100)

## குடிநீர் விநியோகத்திட்டம் கிளிநொச்சியில் விஸ்தரிப்பு

### தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 29 கிராம அலுவலர் பிரிவுகளில் 4811 நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நீர் இணைப்பு குழாய்கள் பொருத்தும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மாவட்டத்தில் உள்ள 95 கிராம சேவையாளர் பிரிவுகளில் 29 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு முழுமையாகவும் பகுதியளவிலும் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 32 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு விஸ்தரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

46ஆயிரத்து 741 குடும்பங்களுக்குான நீர் வழங்கல் செயற்றிட்டத்தில் 14 வீதமான மக்களுக்கே இது வரை குடிநீர் வழங்கப்பட்டுள்ளதாகவும் 2025 ஆம் ஆண்டில் இது முழுமைப்படுத்தப்படும் என்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி காக்காகடைச் சந்தியில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் 95 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளதாகவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இதனை செயற்படுத்தக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-5-6-315)



வவுனியாவில் 'மலையகம் 200' நிகழ்வும் இரா.சுப்பிரமணியத்தின் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல வெளியீடும் நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்:சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போகம் மோசமாக பாதிக்கப்படும் அபாயம்

## பொருளாதாரத்தில் மீண்டும் ஒரு தாக்கம் என நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

வரட்சி காரணமாக பெரும் போகம் வீழ்ச்சியடையும் சாத்தியம் உள்ளதாக வானிலை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் மீண்டும்ஒரு தாக்கம்ஏற்படலாம்எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே 2023 ஆம் ஆண்டில் இலங்கை விவசாயிகள் கடினமான ஆண்டை எதிர்கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு வெப்பமான ஆண்டாக உலக விஞ்ஞானிகள் கணித்துள்ள நிலையில், எல்நினோ விளைவு காரணமாக இலங்கையின் பெரும்போக பயிர்ச்செய்கைப் பருவம் வரட்சியினால் மோசமாகப் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை பலவீனமடையும் நிலை எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.(நி-5)

# நீதிபதிகளை விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை

## நீதியமைச்சர் காட்டம்

(கொழும்பு)

"நீதிமன்றத்தையோ - நீதிபதிகளையோ விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை" என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது, நாட்டின் ஜனாதிபதி கூட நீதிமன்றத்துக்குத் தலை வணங்கத்தான் வேண்டும்.

பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பில் தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கையில் மரநண்டு



(கொழும்பு)

மத்திய மாகாண சுற்றாடல் அமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த சுற்றாடல் ஆய்வாளர்கள் குழுவொன்று கண்டி, துனுமடலாவ காட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் முதன் முறையாக இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட மரநண்டு இனத்தை கண்டு பிடித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள 51 நண்டு வகைகளில் 50 நண்டு இனங்கள் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவை, மேலும் துனுமடலாவையில் காணப்படும் நண்டு இனமே ருஸ்ஸ மரங்களைச் சுற்றியுள்ள பொந்துகளில் வாழும் ஒரே இனம் என்பதும் முக்கியமானது என ஆய்வாளர் அனில் விஜேதுங்க தெரிவித்துள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 750 | 650 | 800 | 800 |
| தக்காளி | 420 | 450 | 500 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 200 | 280 |
| கோவா | 350 | 250 | 300 | 320 |
| கரட் | 360 | 500 | 500 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 180 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 160 | 100 | 140 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 700 |
| வெண்டைக்காய் | 200 | 250 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 420 | 380 | 400 | 450 |
| கறிமிளகாய் | 380 | 350 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 70 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 260 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 500 |
| முள்ளங்கி | 120 | 140 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 120 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2873

**தருண்**


அம்மா: இந்த நாய் திங்குது, தூங்குது குளிக்க மாட்டேங்குது.



Dog mind voice: இவங்க நம்மல திட்டுறாங்களா... இல்ல அவங்க பையன திட்டுறாங்களா..

**நிருஷா**

உன் பொண்டாட்டிக்கும் உன் அம்மாவிற்கும் சண்டை வந்தா... யார் பக்கம் நிப்ப...?



பீரோ பக்கம் நிப்பேன்... என் மேல அடி கிடி பட்டுறக் கூடாதில்ல...

**குமரன்**

காதலியோட சண்டை போட்டா கூட நல்லா மூக்குமுட்ட சாப்பிட முடியுது...!



ஆனா இந்த லூசு தங்கச்சி கூட சண்டை போட்டா ஒரு இட்லி கூட சாப்பிட முடியல...!!

**பகிர்**




அது என்னடா செல்லம் கஞ்சத்தனமா அஞ்சனா நாலனா எட்டனானு நூறு ஐந்நூறுனு வைக்க வேண்டியது தானே என் செல்லமே

**தனன்யா**

சிலருக்கு நாம மகிழ்ச்சியா இல்லைன்னு தெரியக்கூடாது...
சிலருக்கு நாம மகிழ்ச்சியா இருக்கோம்ன்னு தெரியக்கூடாது...
சிலருக்குலாம் நாம இருக்கோம்னே தெரியக்கூடாது...



**பிரியா**

சும்மா சும்மா என்ன திட்டாத நானும் கோவிச்சுக்கிட்டு ஆண்ட்டி வீட்டுக்கு போய்டுவேன்...




நீ அப்பாவ திட்டினா அவரு அங்கதான் போறாரு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 226





"ஆம், தாயே! ஆம்!" என்று பல குரல்கள் மறுமொழி கூறின.

"மூன்று மாதமாக இருமலினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒரு வாரம் வைத்தியரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டதில் குணமாகி விட்டது!" என்றாள் ஒரு பெண்மணி.

"அம்மா! என் மகன் மரத்தின் மேல் ஏறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டான். வைத்தியர் கட்டுப் போட்டு விட்டுப் பதினைந்து நாள் மருந்து கொடுத்தார். சுகமாகி விட்டது. இப்போது துள்ளி ஓடி விளையாடுகிறான். மறுபடி மரத்தின் மேல் ஏறவும் ஆரம்பித்து விட்டான்!" என்றாள் இன்னொரு ஸ்திரீ.

"என் தாயாருக்குக் கொஞ்ச காலமாகக் கண் மங்கலடைந்து வந்தது. ஒரு மாதம் இந்த ஆதுரசாலைக்கு வந்து மருந்து போட்டுக் கொண்டு வந்தாள். இப்போது கண் அவளுக்கு நன்றாய்த் தெரிகிறது!" என்றாள் இளம்பெண் ஒருத்தி.

"பார்த்தாயா வானதி! நம் தமிழகத்தில் வாழ்ந்த முன்னோர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? இன்ன வியாதியை இன்ன மூலிகையினால் தீர்க்கலாம் என்று அவர்கள் எப்படித்தான் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை!" என்றாள் குந்தவைப்பிராட்டி.

"ஞானக்கண் கொண்டு பார்த்துத் தான் அவர்கள் இவ்வளவு அதிசயமான மருந்துகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். வேறு எப்படி முடியும்?" என்றாள் வானதி.

"எவ்வளவோ அதிசயமான மருந்துகளை அவர்கள் கண்டுபிடித்திருப்பது உண்மைதான். ஆனால் உன்னைப் போல் மனோவியாதியினால் வருந்துகிறவர்களுக்கு மருந்து ஒன்றும் கண்டுபிடிக்கவில்லையே? என்ன செய்வது?"

"அக்கா! எனக்கு ஒரு மனோவியாதியும் இல்லை. கருணை கூர்ந்து இவ்விதம் அடிக்கடி சொல்லாதிருங்கள்! என் தோழிகள் ஓயாது என்னைப் பரிகசித்து என் பிராணனை வாங்குகிறார்கள்!"

"நன்றாக வேண்டுமடி உனக்கு! உலகத்தில் ஒரு கவலையும் இல்லாமல் வாழ்ந்து வந்த என் தம்பியின் மனம் பேதலிக்கும்படி செய்து விட்டாய் அல்லவா? ஒவ்வொரு தடவையும் இலங்கையிலிருந்து ஆள் வரும்போதெல்லாம் உன் உடம்பு எப்படியிருக்கிறது என்று கேட்டு அனுப்புகிறானே!" என்றாள் இளைய பிராட்டி.

இதற்குள் "வைத்தியருக்கு வழி விடுங்கள்! வைத்தியருக்கு வழி விடுங்கள்!" என்று கோஷம் கேட்டது. அங்கே சூழ்ந்து நின்றவர்களைக் காவலர்கள் விலக்கினார்கள். ஆதுரசாலையின் வயது முதிர்ந்த தலைமை வைத்தியர் வந்து இளவரசிகளை வரவேற்று உபசரித்தார்.

"வைத்தியரே! கோடிக்கரைப் பக்கத்துக் காடுகளில் சில உயர்ந்த மூலிகைகள் இருக்கின்றனவென்று சொன்னீர் அல்லவா? அங்கே போய் வருவதற்காக ஒரு வாலிப வீரரை அனுப்பினேனே? அவர் வந்தாரா?" என்று குந்தவை கேட்டாள்.

"ஆம், தாயே! அந்தச் சூடிகையான இளம்பிள்ளை வந்தான். ஈசான சிவபட்டர் அழைத்துக் கொண்டு வந்தார். அவனுடன் என் மகன் ஒருவனை அனுப்பி வைக்கிறேன்.

என் மகன் கோடிக்கரையிலிருந்து திரும்பி வந்துவிடுவான். தாங்கள் அனுப்பிய வீரன் இலங்கைத் தீவுக்கும் போய் வருவதாகச் சொல்கிறான்..."

"இலங்கையிலிருந்து கூடவா மூலிகை கொண்டு வர வேண்டும்!" என்று வானதி கேட்டாள்.

"ஆம் தாயே! லக்ஷ்மணருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அனுமார் சஞ்சீவி பர்வதம் கொண்டு வந்த போது கோடிக்கரை வழியாகத் தான் கடலைத் தாண்டினாராம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தங்க எச்சமிடும் பறவை



வெகுகாலத்திற்கு முன்பு மலை அடி வாரத்தில், ஒரு பெரிய மரத்தில் அழகான பறவை ஒன்று வசித்து வந்தது. அது அதிசயமான ஒரு பறவை. அதன் உடலில் இருந்து வெளியேறும் எச்சம் நிலத்தில் விழுந்தால் அது தங்கமாக மாறிவிடும்.

ஒரு நாள் வேடன் ஒருவன் அந்த பறவை வசித்து இருந்த மரத்தின் அடியில் ஓய்வெடுக்க உட்கார்ந்திருந்தான். அங்கு நிலத்தில் கிடந்த தங்கை எச்சத்தை கண்டு ஆச்சரியப்பட்டான் மேலே மரத்தில் பார்த்தான். அங்கே அந்தப் பறவை இருப்பதை கண்டான். உடனே அவனுக்கு புரிந்தது. இந்த பறவையின் எச்சம் தான் நிலத்தில் விழுந்ததும் தங்கமாக மாறுகிறது என்று.

நேரத்தை வீணாக்காமல் அந்த பறவையை பிடித்து கூண்டிற்குள் அடைத்தான். வீட்டுக்குத் திரும்பும்போது "இந்தப் பறவை என் கையில் இருப்பது அபாயம் போல் இருக்கிறது" என்று அவன் எண்ணினான். விலை உயர்ந்த அந்தப் பறவை தன்னிடம் இருப்பது அரசருக்கு தெரிந்தால் பெரிய பிரச்சினை ஆகிவிடும். எனவே மறுநாள் வேடன் அந்த பறவையை கொண்டு அரசனுக்கு பரிசாகக் கொடுத்தான். அந்தப் பறவையின் விசேஷ குணத்தையும் அரசருக்கு எடுத்துரைத்தான் அவன்.

வேடனின் இந்த நல்ல குணத்திற்காக அரசன் அவனுக்கு கை நிறைய பரிசுகள் கொடுத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மந்திரிகள் அரசரிடம், "அரசே! ஒரு முட்டாள் வேடன் கூறுவதை எப்படி நீங்கள் நம்புகிறீர்கள். நம் நாட்டில் இது வரை ஏதாவது பறவை தங்க எச்சம் இட்டுள்ளதா" என்று கேட்டார்கள்.

உடனே அரசன் தான் ஏமாற்றப்பட்டு இருப்பதாக எண்ணி அந்த பறவையை கூண்டில் இருந்து வெளியே திறந்து விட்டார். வெளியே வந்த பறவை ஒரு கதவின் மீது ஏறி உட்கார்ந்து எச்சம் போட்டது. அந்த எச்சம் தரையில் விழுந்ததும் அது தங்கமாக மாறியது. அதை பார்த்த அரசனும் மந்திரிகளும் திகைத்துப் போயினர். அந்தப் பறவை அங்கு இருந்து பறந்து சென்றது.

அப்போது அது யோசித்தது "ஒரு வேடன் பிடிக்கும் அளவுக்கு நான் முட்டாளாக இருந்துள்ளேன். என்னை அரசனிடம் கொண்டு ஒப்படைத்த வேடனும் ஒரு பெரிய முட்டாள். என்னை கூண்டிலிருந்து வெளியே திறந்து விட்ட அரசனும் மந்திரிகளும் அதற்குமேல் முட்டாள்கள்" என்று எண்ணியபடி பறந்து சென்றது.

நீதி : சில நேரங்களில் பெரிய புத்திசாலியும் கூட முட்டாள் ஆகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
- மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சீதையின் ஞாபகமூட்டல் இராமருக்கு ஈழத் தமிழரின் நினைவூட்டல் மோடிக்கு

இராவணனால் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையை இராமதூதன் அனுமன் சந்திக்கின்றான்.

சீதாப்பிராட்டியைத் தன் தோள் மீது சுமந்து செல்ல அனுமன் நினைத்தானாயினும் அதற்குச் சீதை உடன்பட மறுத்தாள்.

எனினும் சீதை அனுமனிடம் இராமபிரானுக்கு ஒரு தகவலைத் தெரியப்படுத்துமாறு கூறினாள்.

அனுமன்! என் தலைவன் இராமன் என்னைத் திருமணம் செய்தபோது எனக்கு வாக்குறுதி ஒன்றைத் தந்தருளினான்.

அந்த வாக்குறுதி; **இந்தை இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன்** என்பதாகும்.

இதனை இராமனிடம் ஞாபகப்படுத்திச் சொல் என்றாள்.

ஆம், இலங்கையில் உள்ள அசோகவனத்தில் இருந்த சீதை இந்தியாவில் இருக்கும் இராமருக்கு சொல்லி அனுப்பிய செய்தி இது.

அன்று இலங்கையில் இருந்து அனுமன் ஊடாக சீதை சொல்லி அனுப்பிய செய்தி போல, இன்று ஈழத் தமிழர்களாகிய நாமும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு அவர் தந்த வாக்குறுதியைச் சொல்லி அனுப்புகின்றோம்.

பாரதப் பிரதமர் மோடி அவர்களுக்கு அன்பு வணக்கம்.

தாங்கள் இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தபோது, எங்கள் தமிழ் அரசியல் தலைவர்களிடம்; இந்தியாவை நம்புகிறீர்களா? இந்தியாவை நம்புங்கள் நிச்சயம் உங்களை நாங்கள் கைவிடமாட்டோம் என்று வாக்குறுதி வழங்கியிருந்தீர்கள்.

அந்த வாக்குறுதி மீது ஈழத் தமிழ் மக்களாகிய நாங்கள் அசையாத நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ளோம்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியாவுக்கு வருகை தந்து தங்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என அறிகின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உங்களைச் சந்தித்து உரையாடும்போது, எங்கள் இனப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு வலியுறுத்துங்கள். அதனைச் செய்யத் தவறினால் இந்தியாவின் ஆதரவு இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்க வாய்ப்பில்லை என்று கூறுங்கள்.

தவிர, தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சைவாலயங்கள் அமைந்த இடங்களில் விகாரைகளை நிறுவுதல் ஆகிய இனத்துவேச செயல்களை முற்றாக நிறுத்துமாறு அறிவுறுத்துங்கள்.

நீங்கள் அதட்டினால் மட்டுமே சிங்களப் பேரினவாதம் கட்டுப்படும்.

அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைவதற்கு பிரதமர் மோடி அவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதையே உலக நாடுகள் விரும்புகின்றன.

அதாவது உங்களை மீறி எந்த நாடும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தயாரில்லை.

ஆகையால் முன்னர் சீதை இராமருக்கு செய்தி அனுப்பிய அதே நாட்டில் இருந்து ஈழத் தமிழர்களாகிய நாங்கள் உங்களுக்கு அனுப்புகின்ற செய்தி; இந்தியாவை நம்புங்கள் என்று நீங்கள் எமக்குத் தந்த வாக்குறுதியை தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்பதுதான்.

## தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி
# ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

15 தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவர் அக் கடிதத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்கள் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் நேற்று முன் தினம் இலங்கைக் கடற் படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ள தோடு அவர்களது மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் இச்சம்பவம் தமிழ் நாட்டிலுள்ள மீனவ சமூகத்தினரிடையே மன உளைச்சலையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய-இலங்கைக் கடல் எல்லையை ஒட்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலை நம்பியே பல்லாயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அடங்கியுள்ளதை வெளியுறவுத்துறை அமைச்சர் நன்கு அறிவார் என்றும் தங்களது குடும்பத்தையும் சமூகத்தையும் பராமரிக்க மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் துரதிஷ்டவசமாக இலங்கைக் கடற்படையினரால் இது போன்று கைது செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவது மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆழ்ந்த வேதனையிலும் நிச்சயமற்ற தன்மையிலும் ஆழ்த்தியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நமது மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து மீன்பிடிப் படகுகளைத் திரும்ப ஒப்படைக்கவும் அரசு இலங்கை அதிகாரிகளுடன் இராஜ தந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தற்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சுமூகமான நட்புறவு பேணப்பட்டு வரும் நிலையில் இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமாகத்தான் மீனவர்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்திடவும் சுமூகத் தீர்வினை எய்திடவும் இயலும் எனவும் இதுதொடர்பாக மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சகத்திலிருந்து சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாகவும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆட்டோ விபத்தில் குழந்தை உயிரிழப்பு

மட்டக்களப்பு – ஏறாவூர் பிரதான வீதி தன்னாமுனையில் முச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியில்தடம்புரண்டு வாவிக் கரை கட்டுடன் மோதிய விபத்தில் ஒரு வயதும் 3 மாதமும் கொண்ட குழந்தை ஒன்று உயிரிழந்ததுடன் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பாமுனையைச் சேர்ந்த ஒரு வயதும் மூன்று மாதங்களுமுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதான வீதி தன்னாமுனையில் வேகக்கட்டுப்பாட்டை மீறி வீதியில் தடம்புரண்டு வாவிக் கரை கட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து கீழே வீழ்ந்த குழந்தை மீது முச்சக்கர வண்டி ஏறியதையடுத்து குழந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் குழந்தையின் தாய் உள்ளிட்ட மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

## இ.போ.ச வில் இணைய வழியில் ஆசனப் பதிவு முறை

இலங்கை போக்குவரத்துச் சபையின் நீண்ட தூர பேருந்துகளுக்கான நேர அட்டவணையை எளிதாகக் கண்டறியும் வகையில் இணைய அடிப்படையிலான செயலிஒன்று நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் அமைச்சர் பந்துல குணவர்தன வினால் 'sltb. eseat.lk' என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

செயலியை ஆரம்பித்து வைத்த அமைச்சர் இது இலங்கையின் மிகப் பெரிய இணைய முன்பதிவுதளமாகும் என குறிப்பிட்டார். (ம)

## சூதாட்டம் 28 பேர் கைது

(அம்பாறை)

அம்பாறை – பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு இந்து மயானம் அருகில் உள்ள வெற்றுக் காணிகளில் தினமும் பணத்திற்காக சட்ட விரோதமாக ஒன்று கூடி சூதாட்ட நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாக பொதுமக்களிடம் இருந்து பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்க பெற்றிருந்தது.

முறைப்பாடுகளுக்கு அமைய சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து 28 சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

சட்ட விரோதமாக ஒன்று கூடி பல்வேறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைதான அனைவரும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-7)

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி 45 மாணவர்கள் காயம்

(பொலநறுவை)

பொலநறுவை – ஹிங்குராக்கொட ஆரம்ப பாடசாலையில் குளவி கொட்டுக்கு இலக்கான 48 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பாடசாலைவளாகத்தில், இருந்த குளவி கூடு ஒன்று கலைந்ததில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கானவர்களில் 45 பேர் பாடசாலை மாணவர்களாவர்.

அவர்கள் ஹிங்குராக்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், கோவில்குளம் 10ம் ஒழுங்கை, மகாறம்பைகுளம், மதுரநகர்கல் நாட்டினகுளம், பெரியகூமரசங்குளம், சமளங்குளம், சிதம்பரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கடந்த ஜூன் மாதத்தில் சுற்றுலா பயணிகளின் வருகை ஒரு இலட்சத்தை தாண்டியது

கடந்த ஜூன் மாதத்தில் ஒரு இலட்சத்து 388 சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இது கடந்த மே மாதத்தை காட்டிலும் ,யூன் மாதத்தில் அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 24 ஆயிரத்து 874 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

13

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவன் மிகப் பெரிய மருத்துவன் ஆவான். இவன் போரில் காயப்பட்டவர்கள், கால்நடைகள் போன்றவற்றிற்கு மருத்துவ உதவிகளைச் செய்தான் என்றும் தெரிகிறது. இவனது ஆட்சியில் பாகியான் என்னும் சீன யூாத்ரீகன் இவன் நாட்டில் தங்கினான் என்றும் அறிய முடிகிறது. இவனுக்குப் பிறகு இவனது மூத்த மகனான உபதீசன் (369 - 410) இலங்கையை ஆண்டான்.

### உபதீசன் (கி.பி. 369 - 410)

உபதீசன் (369 - 410) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இருபத்து இரண்டாமானவன். இவனும் இவன் தந்தையான புத்ததாசலம் பகர்ணன் போல் மருத்துவ உதவிகளைச் செய்தவன். இராணியும் அண்ணன் உபதீசன் மனைவியுமானவள் இவனுடைய தம்பியான மகாநாமன் என்பவனிடம் கூடாவொழுக்கம் கொண்டிருந்தாள். அதன் காரணமாக மகாநாமன் பௌத்தப் பிக்குவாக மாறி மடத்திற்குச் சென்றான். இராணி சில நாட்களுக்குப் பின் உபதீசனைக் கொன்றாள். இதை அறிந்த மகாநாமன் அரண்மனைக்கு வந்து அரசாட்சியைக் கைப்பற்றினான்.

### மகாநாமன் (கி.பி. 410 -432)

மகாநாமன் (கி.பி410 -432) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இருபத்து மூன்றாவது அரசன். இவனது அண்ணனான உபதீசன் என்பவனின் மனைவி இவன் மேல் கொண்ட கூடாவொழுக்க ஆசையால் உபதீசனைக் கொன்று இவனை அரசனாக்கினாள். இவனுக்கு இன்னொரு மனைவி உண்டு. அவள் தமிழ் குலத்தைச் சேர்ந்தவள் என்பதால் தமிழமகிசி எனப்பட்டாள். இவர்களுக்கு கொத்திசேனன் என்ற மகனிருந்தான். மகாநாமன் 22 ஆண்டுகள் அரசாண்டான்.

### சொத்திசேனன்(கி.பி. 432)

சொத்திசேனன் (கி.பி. 432) மகாநாம மன்னரின் தமிழ் அரசியின் மகன் ஆவான்.

### சட்டகஹகஜந்து (கி.பி 432-433)

சட்டகஹகஜந்து (கி.பி. 432-433) மஹாநாமவின் சிங்கள அரசியின் மகள் சங்காவின் கணவர் ஆவான்.

### மித்தசேனன் (கி.பி. 433-434)

மித்தசேனன் (433-434) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இருபத்து ஆறாவது அரசன். மேலும் முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இறுதியானவனும் ஆவான். இவன் இவனுக்கு முன்னிருந்த லம்பகர்ண அரசர்களுக்கு என்ன உறவினன் என்பது தெரியவில்லை.

கொள்ளைக்காரனாக இருந்த இவன் அரச பரம்பரை அல்ல என்று தெரிகிறது. இவனது ஆட்சியிலேயே பாண்டு என்னும் பாண்டிய அரசன் இலங்கையைக் கைப்பற்றி அநுராதபுரம் என்ற நகரை தலைநகராகக் கொண்டு இராசராட்டிரம் அரசை தோற்றுவித்தான். அதன் பிறகு இலங்கையை பாண்டு வழியில் வந்த ஆறு இராசராட்டிரப் பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள்.

### இராசராட்டிரப் பாண்டியர் வம்சம்

இராசரட்டைப் பாண்டியர்கள் (கி.பி. 434-459) என்பவர்கள் களப்பிரர்கள். அரசர்களின் ஆதிக்கம் தமிழகத்தில் இருந்த போது பாண்டியர் மரபிலிருந்து இலங்கைக்கு சென்று அரசாண்ட பாண்டிய வேந்தர்களாவர். இவர்களைப் பற்றி இலங்கையின் வரலாற்று நூலான சூலவம்சம் குறிப்பிடுகிறது. இவர்கள் ஆண்ட பகுதியின் பெயர் இராசராட்டிரம் என்பதால் இவர்கள் வரலாற்று ஆசிரியர்களால் இராசராட்டிரப் பாண்டியர்கள் எனப்பட்டனர்.

முதலில் இவ்வரசை நிறுவிய பாண்டு என்னும் பாண்டிய மன்னன் அதற்கு முன் அநுராதபுரத்தை ஆண்ட மித்தசேனன் என்னும் மன்னனை தோற்கடித்து அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இராசராட்டிர ஆட்சியை தொடங்கி வைத்தான். இவனுக்குப் பிறகு ஐந்து பாண்டியர்கள் வடஇலங்கையை ஆண்டார்கள். தாதுசேனன் என்ற இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்தைச் சேர்ந்தவன். ஆறு இராசராட்டிர பாண்டியர் மன்னர் ஆட்சியிலும் இராசராட்டிரம் மீது படையெடுத்தான்.

அனைத்து படையெடுப்பிலும் பாண்டிய மன்னர்களுக்கே வெற்றி கிட்டினாலும் திரிதரன் மற்றும் தாட்டியன் போன்ற இராசராட்டிரப் பாண்டியர்கள் இவனால் கொல்லப்பட்டனர். முடிவாக ஆறாம் இராசராட்டிரப் பாண்டிய மன்னனான பிட்டியன் ஆட்சியில் அவனைக் கொன்று இலங்கையைக் கைப்பற்றினான். அதிலிருந்து இராசராட்டிரப் பாண்டியர் ஆட்சி முடிவு பெற்றது.

உரோகணம் (ருகுணு) நாட்டிலுள்ள கதிர்காமம் என்ற முருகன் படைவீட்டில் தாட்டியன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அதனால் இவனது ஆட்சியில் இராசராட்டிரம் அரசு இலங்கை முழுதும் பரவியிருந்ததை அறிய முடிகிறது. அக்கல்வெட்டின்படி இவன் புத்த சமயத்தை சேர்ந்தவன் என்றும் கிரிவிகாரை என்னும் புத்த மடத்திற்குத் தானம் அளித்தான் என்றும் உரோகணம் (ருகுணு) நாட்டில் சில காலம் தங்கியிருந்தான் எனவும் தெரிகிறது.

### பாண்டு (கி.பி. 434 - 439)

பாண்டு (434 - 439) என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் முதலாமானவன். களப்பிரர் காலத்தில் தமிழகத்திலிருந்து தன் இரண்டு மகன்களுடன் தப்பி வந்த இவன் அந்நாட்டை அரசாண்டு கொண்டிருந்த மித்தசேனன் என்பவனை தோற்கடித்து இராசராட்டிரப் பாண்டியர் அரசை நிறுவினான்.

இவனுக்கு பிறகு இவனது மகன்களான பரிந்தன் மற்றும் இளம் பரிந்தன் முறையே இராசராட்டிரம் அரசை ஆண்டனர். இவனது ஆட்சியில் இராசராட்டிரம் தெற்கே மகாவலிகங்கையாற்றையும் மற்ற மூன்று திசைகளிலும் கடலையும் எல்லையாகக் கொண்டமைந்தது. இதன் தலைநகரம் அநுராதபுரம் ஆகும். இவன் மகாவலி கங்கையாற்றின் வடபகுதியில் 28 பாதுகாப்பு எல்லைக் கோட்டைகளை கட்டினான்.

### பரிந்தன் (கி.பி. 439 - 442)

பரிந்தன் (439 - 442) என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் இரண்டாமானவன். இவன் பாண்டு (434 - 439) என்ற இராசராட்டிரப் பாண்டியர்களுள் முதலமானவனின் மூத்த மகனாவான். இவனுக்குப் பிறகு இவனது தம்பியான இளம் பரிந்தன் (442 - 458) இராசராட்டிர அரசை ஆண்டான். இவனது வரலாறு அறியப்படவில்லை ஆயினும் இவன் ஆட்சியில் தாதுசேனன் என்ற உரோகண நாட்டு அரசன் இராசராட்டிரத்திற்கு படையெடுத்து வந்தான் என அறிய முடிகிறது.

### இளம்பரிந்தன் (கி.பி. 442 - 458)

குட்டபரிந்தன் அல்லது இளம் பரிந்தன் அல்லது புத்ததாசன் என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் மூன்றாமவனாவான். இவன்பரிந்தன் (439 - 442) என்ற இராசராட்டிரப் பாண்டியர்களுள் இரண்டாமவனின் ஆட்சிக்குப் பிறகு ஆண்டவன். இவன் பரிந்தனின் தம்பியாதலால் இளம்பரிந்தன் என்று அழைக்கப்பட்டான். இவன் ஆட்சியில் தாதுசேனன் என்ற உரோகண நாட்டு அரசன் இராசராட்டிரத்திற்கு படையெடுத்து வந்து தோல்வியுற்றான்.

அநுராதபுரம் நகரிலுள்ள இவனுடைய கல்வெட்டுகள் தற்போது அநுராதபுரத்து தொல்பொருள் திணைக்களத்தில் காணப்படுகின்றன. அக்கல்வெட்டின்படி புத்த சமயத்தை சேர்ந்தவன் என்றும் இவனுடைய மனைவி புத்த விகாரை ஒன்றுக்கு தானம் செய்ததையும் அறிய முடிகிறது.

### திரிதரன் (கி.பி. 458)

திரிதரன் (458) என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் நாலாமானவன். இவன் இளம்பரிந்தன் (442 - 458) என்ற இராசராட்டிரப் பாண்டியர்களின் ஆட்சிக்குப் பிறகு ஆண்டவன். இவன் ஆட்சியில் இரண்டாம் மாதத்தின் போது தாதுசேனன் என்ற உரோகண நாட்டு அரசன் இராசராட்டிரத்திற்கு படையெடுத்து வெற்றி பெற்று திரிதரனையும் கொன்றான் என அறியமுடிகிறது. அதற்குப் பிறகு தாட்டியன் என்னும் இராசராட்டிரப் பாண்டிய மன்னன் இராசராட்டிரம் அரசை ஆண்டான்.

### தாட்டியன் (கி.பி. 458-459)

தாட்டியன் என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் ஐந்தாமானவன். இவன் திரிதரன் என்ற இராசராட்டிரப் பாண்டியர்களுள் நாலாமானவனின் ஆட்சிக்குப் பிறகு ஆண்டவன்.

இவன் ஆட்சியில் தாதுசேனன் என்ற உரோகண நாட்டு அரசன் இராசராட்டினத்தினத்திற்கு படையெடுத்து வந்து தோல்வியுற்றான். இவர்கள் இருவருக்கும் பல தடவைகள் போர் நடந்திருக்கலாம் எனத் தெரிகிறது. அனைத்திலும் பாண்டியனே வெற்றி பெற்றான். கடைசியாக இவர்கள் இருவருக்கும் நடந்த போரில் தாட்டிய பாண்டியன் இறந்து போனாலும் பாண்டியர்ப் படையே வெற்றி பெற்றது.

உரோகண நாட்டில் உள்ள கதிர்காமம் என்ற முருகன் படைவீட்டில் இவனுடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அதனால் இவனது ஆட்சியில் இராசாராட்டின அரசு இலங்கை முழுவதும் பரவி இருந்ததை அறிய முடிகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில்...

தங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற அனுமதியுடன் நேற்றுக் காலை விசேட அதிரடிப் படையினரால் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் 13 பெரிய பராக்களும், ஒரு சின்ன பராவும், 82 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 49, 60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு ஒன்றும், 6 ஆர்.வி.ஜி குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 56 கைக்குண்டுகளும் ஒரு தொகை தோட்டாக்கள் என பெருமளவிலான வெடிபொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (ம-7)

## இளம் குடும்பஸ்...

இதில் பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராஜ்குமார் (வயது-35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் உறவினர்கள் மூவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவர் இணைந்து ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். இதன்போது அவர் மீது கத்திக்குத்தும் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து இருவரை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ம-7,104)

## மல்லாவியில்...

டிலக்சன் (வயது-23) என்ற இளைஞனே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவராவார்.

முல்லைத்தீவு, மல்லாவி, பாலிநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த 23 வயதான இளைஞன் மீதே நாட்டு துவக்கு (இடியன்) கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை பாலி நகர் பகுதியில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் காரணமாக இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்த கிளிநொச்சி மாவட்ட தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்ட நீதவான் உடற்கூற்ய்வு பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு பணித்தார். (ம-7)

## மண்வெட்டியால்...

இளைஞனே உயிரிழந்தவராவார்.

நண்பர்கள் இருவர் நேற்று முன்தினம் மதுபானம் அருந்தியபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதையின் உச்சத்தில் பழைய தகராறு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக சந்தேகநபர் மண்வெட்டியால் உயிரிழந்த நபரை தாக்கியதாகவும், பலத்த காயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல்நடந்த இடத்தை சோதனை செய்ததில், மதுப் போத்தல்கள், தாக்குதலுக்கு பயன்படுத்திய மண்வெட்டி மற்றும் இறந்தவரின் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையின் பின்னர் சந்தேகநபர் ஈச்சங்குளம் பொலிஸில் சரணடைந்துள்ளார். (ம-7,250)

## சரத் வீரசேகர...

பினர்களும் கலந்துகொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## சுற்றுலா...

நடந்த உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தம் நந்திக்கடல் பகுதியில் இடம்பெற்றிருந்தது.

இதில் பல இலட்சம் மக்கள் கொத்தணி குண்டுகளாலும் தோட்டாக்களாலும் பலியாகியிருந்தனர்.

இந்நிலையில் நந்திக்கடல் கடற்கரையும் புதிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மை திணைக்களம் இதுவரை இதுபோன்ற 24 இடங்களை அடையாளம் கண்டுள்ளது. (ம-7)

## இந்தியா...

ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா அனுமதித்தால் தமிழ் நாட்டின் நாகபட்டினத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கப்பல்களைப் பெறுவதற்குத் தயாராக இருப்பதாக நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தென்னிந்தியாவுக்கும் (பாண்டிச்சேரி) காங்கேசன்துறைக்கும் (கே.கே.எஸ்) எந்த நேரத்திலும் படகுச் சேவையைத் தொடங்க இலங்கை தயாராக இருப்பதாகவும், ஆனால் இந்தியா அனுமதி வழங்காததால் தான் இந்தச் சேவையைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒரு கூட்டுக் குழு உள்ளது.

"இதுவரை எந்த பிரச்சினையும் இல்லை, ஆனால் எங்களுக்கு கப்பல்சேவை வேண்டும். கே.கே.எஸ் துறைமுகத்தில் பயணிகள் முனையம் மற்றும் பிற வசதிகளை நாங்கள் அமைத்துள்ளோம். இந்தியாவுடன் எங்களுக்கு கிடைத்த சமீபத்திய தகவல்களின்படி, அவர்கள் கப்பல் சேவையை தொடங்க முடியும் என சொன்னார்கள்.

"இந்தியாவுடனான பாதுகாப்பு மதிப்பீட்டின்படி, இலங்கைக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இந்த திட்டத்திற்கு யார் ஒப்புதல் அளித்தாலும், நாங்கள் அதை ஏற்றுக் கொள்வோம்.

"கப்பல் நடத்துநர்கள் இந்திய அரசாங்கத்தைத் தொடர்புகொண்டு, தங்களின் நற்சான்றிதழ்கள் மற்றும் அவர்களின் உண்மையான தன்மையை நிரூபித்து, நாக பட்டினத்திலிருந்து கப்பல் சேவையை தொடங்குவதற்கு இந்தியாவிடம் அனுமதி பெற வேண்டும். இந்திய அரசாங்கம் பச்சைக் கொடி காட்டிய தருணத்திலிருந்து, எந்தவொரு கப்பலையும் பெறுவதற்கு நாங்கள் அனுமதி வழங்குவோம்.

கப்பல் நடத்துனர்களிடம் இருந்து பதினைந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கூறினார். இந்தியாவில் சில தெரிவு நடைமுறைகள் இருக்கும். கப்பல் நடத்துநர்களுக்கான 15 விண்ணப்பங்களையும் இந்திய அரசாங்கம் அங்கீகரித்தால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

தன நிதானய
திகதி - 2023.07.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1201
L 04 17 64 65 L
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.10 | சீட்டிழுப்பு இலக்கம் 3413
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
A 04 06 10 65
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1519
A 24 07 11 34 68

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 480
மீனம் 23 25 41 62 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 5171
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 0 8 0 8 4 4
தேசிய லொத்தர் சபை

கப்ருக
திகதி 09.07.2023 வெற்றி வாரம் 1320 வர்ணம் மஞ்சள்
Z 25 02 12 23 28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 414,745,634.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 04 42 51 72 X
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2145 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.10 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 23 26 47 73 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,319,180.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 08 10 68 76 W

சனிதா
திகதி 2023.07.10 வெற்றி வாரம் 4306 வர்ணம் இளம் நீலம்
13 34 65 67 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,540,468.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 02 24 48 74 U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3857 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.10 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 08 28 45 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,378,268/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 11 19 41 50 மேஷம்

கப்ருக
திகதி 10.07.2023 வெற்றி வாரம் 1321 வர்ணம் பசுமை
N 07 04 26 58 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 415,139,154.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 14 25 36 54 H
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.07.10 வெற்றி வாரம் 1937 வர்ணம் செம்மஞ்சள்
02 10 12 40 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.44,740,219.20
ஜயோதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 11 25 33 54 M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 1971
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.07.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 56,357,214/-
வெற்றி இலக்கங்கள் 02 07 26 38 L
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 45 50 51 75 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

செப்டெம்பர் மாதத்திற்கு பின்னர் அத்தியாவ்சிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதன் ஊடாக இந்த பொருளாதார நெருக்கடி உருவாகும். வெளிநாட்டு கடனை திரும்ப செலுத்துவது ஆரம்பிக்கப்படும்.

வெளிநாட்டு கடன் திரும்ப செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக மீதமாகியுள்ள அந்நிய செலாவணியை பயன்படுத்தியே அரசாங்கம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்து வருகிறது.

நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமையானது தற்காலிகமானது, செப்டெம்பர் மாதத்திற்கு பின்னர் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம்.

அதேவேளை நான் ஜனாதிபதியாக பதவிக்கு வருவது குறித்து சிலர் அச்சத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். நான் ஜனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு தகுதியில்லை என்பதற்கான காரணங்களை எவரும் இதுவரை முன்வைக்கவில்லை.

ஊழல் அரச அதிகாரிகள், மோசடியான வியாபாரிகள், மோசடியான குடும்ப ஆட்சியாளர்கள் நான் ஜனாதிபதியாக பதவிக்கு வருவதை விரும்பவில்லை என்பதுடன் நான் அந்த பதவிக்கு வந்தால் தமக்கு என்ன நடக்குமோ என்று அச்சப்படுகின்றனர் என தெரிவித்துள்ளார். (ம-7)

# பாடசாலை தவணை கலண்டரில் மாற்றம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைக்கான உத்தேச காலப் பகுதி தீர்மானிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் பாடசாலை தவணைக் கலண்டரில் மாற்றம் ஏற்படுத்தி மீண்டும் வெளியிட கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணைக்கான முதல் கட்டம் 2023.10.30 ஆரம்பித்து 2023.11.24 வரைத் தொடரும். சிங்கள தமிழ் பாடசாலைகளுக்கு 2023.11.25 முதல் 2023.12.31 வரை விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணைக்கான முதல்கட்டம் 2023.10.30 ஆரம்பித்து 2023.12.12 வரை தொடரும். முஸ்லிம் பாடசாலைகளுக்கு 2023.12.13 முதல் 2023.12.31 வரை விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2023.11.25 முதல் 2023.12.31 வரை க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உள்ளக சுற்றுநிரூப வரைபு தெரிவிக்கிறது. இத்தீர்மானம் இறுதியானதும், இது தொடர்பான அறிவித்தலை கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக வெளியிடும்.

டிசம்பர் அளவில் க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்...

வதற்காக, இந்திய வெளிவிவகார செயலாளர் வினய்மோகன் குவத்ரா நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார்.

அங்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இந்தியாவிற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தட்வை என்பதும் விசேட அம்சமாகும். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16222)

076 825 7716 (ஆகாஸ்)

**வேலையாட்கள் தேவை**

உடுவில் பிரதேச சபை (கந்தரோடை) எல்லைக்குள் தங்கி நின்று வீடு பராமரிக்கஇரு ஆண் பணியாளர்கள் தேவை

- நற்பழக்கம் மற்றும் தேக ஆரோக்கியம் உரியவராக இருத்தல் வேண்டும்
- சம்பளம் திறைமைக்கேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

வயதெல்லை 50-65

(16263) 074 049 1582

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

வயது : 30 - 65

(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்புகளுக்கு

076 097 3121

**அதிபர்,ஆசிரியர்கட்கு**

பாடசாலைக்கு தேவையான தரம் 1 - O/L,A/L வரையான மாணவர் கணிப்பீட்டு அறிக்கை,தேர்ச்சி அறிக்கை,தரம் 1-5 வரையான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் வெளிவந்து விட்டது.உடன் பெற்றுக்கொள்ளலாம். (16264)

தயா அச்சகம்
தயா வெளியீடு
92/150,நாவலர் வீதி (மனோகரா சந்தி NSB வங்கி அருகாமை)

077 396 5214,077 467 0304

**வீடு வாடகைக்கு**

நாவற்குளி றெயில்வே ஸ்ரேசன் புத்தர் கோவில் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு (16265)

077 339 9072

**வேலையாட்கள் தேவை**

வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel Indian Restaurant ற்கு

- House Keeper
- Waiter (உணவு பரிமாறுநர்)

அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை (16255)

076 830 3931

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-6899)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-6899)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சிறிய குடும்பத்தில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கும் வயோதிபத் தாய் ஒருவரை பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை (16252)

077 327 6502

**பாஸ்போட்**

ஒன்லைன் முற்பதிவு செய்து தரப்படும்.

ஒரு பதிவுக்கு 500/- (C-6892)

076 037 3294

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் - சாவகச்சேரி அரச தனியார் பேரூந்துகள் செல்லும் வீதி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (150,000/=) மட்டும்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16248)

076 826 0354
076 057 0354

உ

**யா/இணுவில் இந்துக் கல்லூரி**

நிறுவுநர்களின் திருவுருவச்சிலை திறப்பு விழா

காலம் : 12.07.2023 (புதன்கிழமை)
இடம் : கல்லூரிப் பிரதான மண்டபம்
நேரம் : மு.ப 8.00 மணி



மகாவித்துவான் பொன்.அம்பிகைபாகர்

பிரதம விருந்தினர்
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

சிறப்பு விருந்தினர்
பேராசிரியர் க.தேவராஜா
(ஓய்வுநிலை பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



பிரம்மஸ்ரீ வெங்கடாசல ஐயர்

(C-6898)

பாடசாலைச் சமூகம், பழைய மாணவர் சங்கம், விழா ஒழுங்கமைப்புக்குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.